


துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.6.2025) மாமல்லபுரத்தில் நடைபெற்ற தமிழ்நாடு வக்ஃபு வாரியத் தலைவரும், இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக்கின் மாநிலத் துணைத் தலைவருமான கே. நவாஸ்கனி எம்.பி.யின் மகன் ந.அப்சர் ஜே.எஸ்.ரீஷ்மான் அப்ரா இணையரின் திருமண விழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்வில் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன், சட்டமன்ற உறுப்பினர்கள் காதர்பாட்சா முத்துராமலிங்கம், எஸ்.எஸ்.பாலாஜி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கௌதம சிகாமணி மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.



நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு 12.06.2025 அன்று கிராப்பட்டியில் நடைபெற்ற விழாவில் மாநகராட்சி பகுதி பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டாக்களை வழங்கினார்கள். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், மாநகராட்சி மேயர் மு.அன்பழகன் , மாநகராட்சி ஆணையர் வே.சரவணன், துணை ஆட்சியர் (பயிற்சி) செல்வி.தீபிசனு, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ர.ராஜலட்சுமி, வருவாய் கோட்டாட்சியர் அருள், வட்டாட்சியர் பிரகாஷ், மாவட்ட நகர் ஊரமைப்புக்குழு உறுப்பினர் க.வைரமணி, மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், ராங்கியம் வருவாய் கிராமத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் 11.06.2025 அன்று நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில், பயனாளிக்கு விலையில்லா சலவைப் பெட்டியினை வழங்கினார். உடன், மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன் , புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பா.ஐஸ்வர்யா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



முதலமைச்சர் அவர்களால் கடந்த 12.06.2025 அன்று சேலத்தில் நடைபெற்ற அரசு விழாவில் சேலம் ஆவினில் திறந்து வைக்கப்பட்ட அதிநவீன 7 இலட்சம் லிட்டர் தானியங்கி பால் பதப்படுத்தும் தொழிற்சாலை மற்றும் புதிதாக பயிற்சியாளர்கள் தங்கும் விடுதி வளாகக் கட்டடம் ஆகியவற்றை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.இரா.பிருந்தாதேவி முன்னிலையில் நேற்று முன்தினம் (14.06.2025) நேரில் பார்வையிட்டார்கள். உடன், மாவட்ட வருவாய் அலுவலர்/ஆவின் பொது மேலாளர் பி.குமரேஸ்வரன் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள், பணியாளர்கள் உள்ளனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் சென்னையில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவிகள் விழாவை தொடங்கி வைத்ததை தொடர்ந்து மயிலாடுதுறையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மகளிர் சுய உதவி குழுவிற்கு கடனுதவிகளை மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ்.ஸ்ரீகாந்த், சட்ட மன்ற உறுப்பினர்கள் எம்.பன்னீர்செல்வம், எஸ்.ராஜ்குமார் ஆகியோர் வழங்கினார்கள். உடன் மாவட்டக் கழக துணைச் செயலாளர் மு.ஞானவேலன், மயிலாடுதுறை நகரக் கழகச் செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ் மற்றும் பலர் உள்ளனர்.

